1993 ஏப்ரல் 21]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார் பாடல்களை யார் வேண்டுமானாலும் அச்சிட்டு வெளியிடலாம், விற்கலாம் என்ற நிலையிலே, அது பொதுச் சொத்தாக இருந்துகொண்டிருக்கிறது. அது நிறைய விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். வி. சண்முகம்.

திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார் அவர்கள் பல நல்ல கவிதைகளை எழுதியிருக்கிறார்கள். பாதகம் செய்பவரை கண்டால் பயம் கொள்ளல் ஆகாது பாப்பா, மோதி மிதித்துவிடு பாப்பா, காரி உமிழ்ந்துவிடு பாப்பா என்று குழந்தைகளுக்குப் புத்தி சொல்லும் வகையிலே பாடியிருக்கிறார்கள். அத்தகைய பாடல்கள், பள்ளிச் சுவர்களில் எழுதி வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார் எழுதிய பாடல்களைப் போதுமான அளவிற்கு நாம் குழந்தைகளுக்கு, மாணவர்களுக்குச் சொல்லித் தந்து கொண்டிருக்கின்றோம். அதிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன எல்லா பாடல்களையும் வைப்பதற்கு எந்த விதத் தடையும் இல்லை. ஆகவே, இதைத் தயாரிக்கின்ற ஆசிரியர்கள் அதையெல்லாம் கவனத்திலே எடுத்துக் கொண்டு, பாடப் புத்தகங்களை திருத்தி அமைக்கின்ற நேரத்தில் தேவையான பாடல்களை மேலும் சேர்ப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 403, டாக்டர் எஸ். சுந்தரராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 404, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

404—

சிவகாசி அரசு மருத்துவமனைக்குப் புதிய ஆம்புலன்ஸ் வாகனம்.

*9894—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி அரசு மருத்துவமனைக்கு வசதிகளுடன் புதிய ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிவகாசி அரசு மருத்துவமனையில் இரண்டு ஆம்புலன்ஸ்கள் ஏற்கெனவே உள்ளன. எனவே, புதியதாக வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 14–4–1993 அன்று மின்னல் தாக்கி கார்னேசன்ஸ் பட்டாசுத் தொழிற்சாலையில் இரண்டு தொழிலாளர்கள் இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு உடனடியாக 10 ஆயிரம் ரூபாய் நிவாரணம் அளித்து உதவிய எங்களுடைய இதயத் தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, சென்ற ஆண்டு ஏற்பட்ட ஒரு விபத்திலே, பட்டாசுத் தொழில் விபத்திலே, கிட்டத்தட்ட 30 பேர்களுக்குச் சிகிச்சை கொடுக்க முடியாமல் இறந்துவிட்டார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், சிவகாசியிலிருந்து மதுரை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல போதுமான அளவு சிறந்த ஆம்புலன்ஸ் வசதி இல்லையென்ற காரணத்தாலும், பி.ஆர்.சி.-யிலிருந்து ஒரு பஸ்சை பெற்றுக்கொண்டு சென்ற காரணத்தால்தான் அன்று அந்த இறப்பிற்குக் காரணமாக இருந்தது.

முற்பகல் 10–40

இப்போது இருக்கும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் இரண்டுமே தள்ளக்கூடிய நிலைமையிலும்—ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு தடவை தண்ணீர் ஊற்றக்கூடிய நிலைமையிலும்தான் இருக்கின்றன. எனவே, இரண்டையும் வேறு இடத்திற்கு அனுப்பிவிட்டு புதிய ஆம்புலன்ஸ் வாகனங்கள் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக கொடுக்கின்ற வாய்ப்பில்லை என்றுதான் சொன்னேன். அந்த இரண்டு வாகனங்களுமே பழுதடைந்ததாக இருந்தால் புதிய வாகனங்களை அங்கே மாற்றிக் கொடுப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும். அதேபோன்று ஏற்கெனவே நடந்த விபத்தில் 30 பேர் சிகிச்சை அளிக்கப்பட முடியாமல் இறந்தார்கள் என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அது அப்படி அல்ல. ஒரு தீக்காயம் ஏற்படுகிறபோது, கடைசி வரை அந்த தீக்காயம் பட்டவர்கள் நன்றாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு திடீரென்று இறந்துவிடுகிற நிலைதான் ஒவ்வொரு விபத்திலும் நாம் பார்க்க முடிகிறது. ஆகவே, அந்த விபத்திலே எவ்வளவு தீக்காயம் பட்டது என்பதைப் பொறுத்துத் தான் அது அமைகிறதே தவிர, சிகிச்சை அளிப்பதில் எந்தக் குறை

1993 ஏப்ரல் 21]

யும் ஏற்படுவதால் அல்ல. உடனடியாக அங்கே வாகனங்களைக் கொண்டுவந்து அங்கேயிருந்து பெரிய மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் சொல்வதுபோல் அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் இறக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 405, டாக்டர் க. கோபால். மாண்புமிகு மக்கள் நல்லவாழ்வுத் துறை அமைச்சர்.

405—

வடகுடியில் தாய்-சேய் நல விடுதி அமைத்தல்.

*17051—டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, வடகுடி பஞ்சாயத்து, வடகுடியில் ஒரு தாய்-சேய் நல விடுதி அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நன்னிலம் தொகுதி வடகுடியில் ஒரு தாய்-சேய் நல விடுதி அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இப்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகுடி பஞ்சாயத்து நிரளான மக்கள் தொகை கொண்ட பஞ்சாயத்து. அதைச் சுற்றியுள்ள நெம்மேலி, வலம்பா பஞ்சாயத்துக்களிலும் நிறைய குக்கிராமங்கள் இருக்கின்ற காரணத்தால் மழைக் காலங்களில் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் நன்னிலம் மருத்துவமனைக்கு வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. மழைக்காலங்களிலும், விவசாயக் காலங்களிலும் சாலை வசதி சரியில்லாத காரணத்தால் அவர்கள் சுமார் 10 முதல் 15 கிலோ மீட்டர் சாலையைச் சுற்றித்தான் வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதுபோன்ற சமயங்களில் ஒரு தாய்-சேய் நல விடுதி அமைத்து ஒரு கிராமச் சுகாதார செவிலியரையும் பணியமர்த்தினால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மருத்துவ வசதி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் வருகிற நிதியாண்டிலேயாவது அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.